சுருக்கம்

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன்– பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துதல்–மானியம் மற்றும் வங்கிக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் 2007–08 முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட மின் இணைப்புகளில், வழங்கப்பட்ட மின் இணைப்புகள் போக மீதமுள்ள மின் இணைப்புகளை மாவட்டங்களுக்கு மறு பகிர்வு செய்தல்–ஆணை–வெளியிடப்படுகிறது.

---

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந1) துறை

அரசாணை (நிலை) எண்.39

நாள் 21.06.2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி, ஆனி 6

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.111, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 31.12.2007.
2. அரசு ஆணை (நிலை) எண்.100, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 24.09.2008.
3. அரசு ஆணை (வா) எண்.06, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந1) துறை, நாள் 23.01.2009.
4. அரசு ஆணை (வா) எண்.78, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (சிந1) துறை, நாள் 17.09.2010.
5. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித ந.க. எண்.டி2/342/2008, நாள் 13.02.2019.

-------

ஆணை

மேலே, ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசனவசதி ஏற்படுத்துவதற்காக வங்கிக் கடன் மற்றும் அதற்கு இணையான அதிகபட்சம் தலா ரூ.50,000/– அளவிலான 50% அரசு மானியம் வழங்க ரூ.25.00 கோடி ஒதுக்கீடும், இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் 500 பயனாளிகளுக்கு 2007–08–ஆம் ஆண்டில் முன்னுரிமை அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடாக 500 மின் இணைப்புகள் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே, இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்திற்கென 2008–09–ஆம் ஆண்டில் ரூ.25.00 கோடி நிதி ஒதுக்கீடும், இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் பயனாளிகளுக்கு 2008–09–ஆம் ஆண்டில் முன்னுரிமை

அடிப்படையில் சிறப்பு ஒதுக்கீடாக 500 மின் இணைப்புகளை தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் வழங்கவும் ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே, மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 2007–08 மற்றும் 2008–09–ஆம் ஆண்டுகளில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இனத்தைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மின்சார வாரியம் வழங்க முன்வந்த 1000 இலவச மின் இணைப்புகளை (ஆண்டொன்றுக்கு 500 இணைப்புகள் வீதம்) மாவட்ட வாரியாக பகிர்ந்தளித்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே, நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்கண்ட 1000 இலவச மின் இணைப்புகளில் பயன்படுத்தப்பட்ட 173 இலவச மின் இணைப்புகள் போக எஞ்சிய 827 மின் இணைப்புகளை தேவைக்கேற்ப இதர மாவட்டங்களுக்கு மறு பகிர்வு செய்தும், 2010–11–ஆம் ஆண்டில் மின்வாரியம் வழங்க இசைவளித்த 2709 இலவச மின் இணைப்புகளை மாவட்டங்களுக்கு கூடுதலாக வழங்கியும் ஆணை வெளியிடப்பட்டது.

5. மேலே, ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், இதுவரை தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 3709 மின் இணைப்புகளில் 15.08.2018 வரை 1854 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் மேலும், எஞ்சியுள்ள 1855 (3709–1854) மின் இணைப்புகளும் 31.03.2019–க்குள் வழங்கப்படும் என தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தால் தெரிவிக்கப்பட்டது எனவும், எஞ்சியுள்ள 1855 இலவச மின் இணைப்புகளை முன்னுரிமை அடிப்படையில் இலவச மின் இணைப்பு தேவைப்படும் மாவட்டங்களுக்கு அவற்றின் தேவைக்கேற்ப மாற்றி வழங்கலாம் என்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளதாக பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

6. மேலே, பத்தி 5–இல் உள்ள பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று, ஏற்கனவே 2007–08 முதல் 2010–11–ஆம் ஆண்டு வரை ஒதுக்கீடு செய்யப்பட்ட 3709 இலவச மின் இணைப்புகளில் 1854 இலவச மின் இணைப்புகள் பயன்படுத்தப்பட்டது போக, மீதமுள்ள 1855 இலவச மின் இணைப்புகளை பின்னிணைப்பில் உள்ளவாறு மறுபகிர்வு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை எரிசக்தித் துறையின் அ.சா.எண்.5575/சி1/2019, நாள் 19.06.2019–ன்படி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
பிற்படுத்தப்பட்டோர் நலம், சென்னை–5.
இயக்குநர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலம், சென்னை–5.
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார
மேம்பாட்டுக் கழகம், சென்னை–8.
தலைமைப் பொறியாளர்(திட்டமிடல் மற்றும் ஆதாரவள மையம்)
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், சென்னை–2.
எரிசக்தித் துறை, சென்னை–9.

அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்/
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

நகல்:

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நல அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (பி,மி.பி) துறை, சென்னை–9.
அரசு செயலாளரின் சிறப்பு தனிச் செயலர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை–9.
அரசு சிறப்புச் செயலாளரின் நேர்முக எழுத்தர்,
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

அரசு ஆணை(நிலை) எண்.39, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(சிந1) துறை, நாள் 21.06.2019–ன் பின் இணைப்பு

மாவட்டவாரியாக மறு பகிர்வு செய்யப்படும் இலவச மின் இணைப்புகளின் விவரம்

| வ. எண். | மாவட்டம் | அரசாணை எண் 6 (ம) 78–ன் படி ஒதுக்கீடு செய்யப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை | மாவட்ட மின் வாரியத்தால் வழங்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை | மாவட்டங்களின் தற்போதைய தேவைக்கேற்ப மறு பகிர்வு செய்து வழங்கப்பட வேண்டிய மின் இணைப்புகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | ஈரோடு | 158 | 157 | 100 |
| 2 | தேனி | 35 | 34 | 0 |
| 3 | மதுரை | 1016 | 240 | 0 |
| 4 | விருதுநகர் | 49 | 49 | 170 |
| 5 | சிவகங்கை | 200 | 200 | 40 |
| 6 | நாகப்பட்டினம் | 125 | 125 | 145 |
| 7 | திருவள்ளூர் | 305 | 25 | 45 |
| 8 | நாமக்கல் | 114 | 112 | 0 |
| 9 | கடலூர் | 58 | 12 | 10 |
| 10 | தஞ்சாவூர் | 75 | 21 | 10 |
| 11 | திருச்சி | 188 | 108 | 0 |
| 12 | திருவண்ணாமலை | 228 | 53 | 250 |
| 13 | திருப்பூர் | 42 | 12 | 0 |
| 14 | காஞ்சிபுரம் | 75 | 66 | 50 |
| 15 | திருவாரூர் | 133 | 72 | 0 |
| 16 | இராமநாதபுரம் | 60 | 30 | 45 |
| 17 | சேலம் | 137 | 137 | 40 |
| 18 | வேலூர் | 95 | 89 | 550 |
| 19 | புதுக்கோட்டை | 99 | 60 | 50 |
| 20 | கரூர் | 77 | 62 | 20 |
| 21 | அரியலூர் | 59 | 54 | 10 |
| 22 | விழுப்புரம் | 50 | 1 | 5 |
| 23 | திருநெல்வேலி | 111 | 111 | 65 |
| 24 | பெரம்பலூர் | 0 | 0 | 10 |
| 25 | கன்னியாகுமரி | 30 | 24 | 0 |
| 26 | நீலகிரி | 0 | 0 | 20 |
| 27 | கோயம்புத்தூர் | 150 | 0 | 80 |
| 28 | கிருஷ்ணகிரி | 20 | 0 | 65 |
| 29 | தர்மபுரி | 20 | 0 | 20 |
| 30 | திண்டுக்கல் | 0 | 0 | 55 |
| 31 | சென்னை | 0 | 0 | 0 |
| 32 | தூத்துக்குடி | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **3709** | **1854** | **1855** |

ஆ. கார்த்திக்
அரசு செயலாளர்

//உண்மை நகல்//

[signature]

பிரிவு அலுவலர்.